**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP.248/2023**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11 ஆம் நாள் புதன் கிழமை
எ.ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஆதித்யா விஸ்வா | த/பெ.: | சேதுராஜன் |
| கிராமம்: | தஞ்சாவூர் | தாலுக்கா: | தஞ்சாவூர் |
| மதம்: | இந்து | தொழில்: | நிர்வாக அதிகாரி, நியூ இந்தியா அசூரன்ஸ் நிறுவனம் |
| வயது: | 25 | முகவரி: | தஞ்சாவூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 11.02.2026

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 10.02.2026 | சாட்சியம் அளிக்க அதிகார கடிதம் | அசல் |
| எ.ம.சா.ஆ.2 | 30.01.2020 | TN 57–BE – 6167 என்ற வாகனத்தின் காப்பீட்டு பாலீசி | நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 29.02.2020 | முதல் தகவல் அறிக்கை | நகல் |
| எ.ம.சா.ஆ.4 | 15.05.2020 | குற்றப்பத்திரிக்கை | நகல் |
| எ.ம.சா.ஆ.5 | 09.02.2026 | குற்ற வழக்கில் மனுதாரர் அபராத தொகை செலுத்தியற்கான ஆதரவு | கணினி பதிவிறக்க நகல் |

2ம் மனுதாரருக்கு எதிராக இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

1ம் எதிர்மனுதாரர் வாகனம் காப்பீடு விபத்தின் போது நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். என்னை பொறுத்தமட்டில் மனுதாரர் மூன்றாம் நபர் என்றால் சரிதான். மனுதாரரின் வருமானம், வேலை வாய்ப்பு, மருத்துவ செலவுகள் தொடர்பாக ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டதை சரிவர விசாரணை செய்யாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரரின் கணவர் தனது வாகனத்தை தலைக்கவசம் அணிந்தும், ஓட்டுநர் உரிமம் கொண்டும், சாலை விதிகளை அனுசரித்து வாகனத்தை இயக்கினார். மனுதாரரின் கணவர் தவறால் விபத்து ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் எவ்வித காப்பீடு விதிமுறை மீறல்களும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. எங்கள் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தால் விபத்து ஏற்பட்டதால் விபத்து இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

**3 ,6 எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.